Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 08, 2023

புதன்கிழமை மார்ச் 08, 2023 | ஒளி: 08 கதிர்: 224 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பொருத்தமான நாள் ஏப்ரல் 25

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு ஏப்ரல் 25ஆம் திகதியே பொருத்தமான நாள் என்று முடிவு செய்து மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அறிக்கை ஒன்றை நேற்று (07) வெளியிட்டு தேர்தல் ஆணைக்குழு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

## குடும்பத்தை கொன்ற தந்தை; தன்னுயிரையும் மாய்த்தார்

### வுனியாவில் சோகம்: கடன் தொல்லையாம்

■ க.அகரன்

வவுனியா குட்செட்வீதி, உள்ளக வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேரின் சடலங்கள் பொலிஸாரால் நேற்று (07) மீட்கப்பட்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மனைவி கட்டிலில் உறங்கியவாறு மரணமடைந்துள்ளார். ஏனைய குழந்தைகள் இருவரும் சோபா ஷெட்டியில் படுத்திருந்தவாறு மரணமடைந்துள்ளார்கள். வீட்டுத் தலைவனான கணவன், தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டிருந்தார்.

சடலங்கள் மீட்கப்பட்ட வீட்டின் உரிமையாளருக்கு, அவரது நண்பர்களில் ஒருவர் தொலைபேசி அழைப்பினை பல தடவைகள் எடுத்துள்ளார். எனினும், மறுமுனையில் இருக்கும் நண்பர் பதிலளிக்கவில்லை. ஏனைய நாள்களில் தொலைபேசி அழைப்பை எடுத்தவுடன் பதிலளிக்கும் நண்பன், நீண்ட நேரமாகியும் பதிலளிக்காமையால் நண்பனுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரது வீட்டிற்கு சென்றுள்ளார். இதன்போது குறித்த வீட்டினுள் குடும்பஸ்தர் அவரது சிறுவயதான தொடர்ச்சி P2



## முந்த முயன்றபோது 2 பஸ்களும் மோதின

### ஒருவர் பலி: 23 பேர் காயம்



மாவனெல்ல பகுதியில் இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 22 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று (07) பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றுமே இவ்வாறு மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன. மாவனெல்ல கனேகொடவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தனியார் பஸ்ஸின் ஓட்டுநர் உட்பட 23 பேர் காயமடைந்து மாவனெல்ல தொடர்ச்சி P2


## "IMF தனது கடமையை செய்யும் வரை நாங்கள் காத்திருப்போம்"



நான் எனது கடமையை நிறைவேற்றிவிட்டேன்; சர்வதேச நாணய நிதியம் (IMF) தனது கடமையைச் செய்யும் வரை காத்திருப்போம் என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, IMF முன்மொழிவு கிடைத்த பின்னர், அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதை அங்கிகரியுங்கள்; அல்லது, மாற்று வழியை முன்வையுங்கள் என்றும் கேட்டுக்கொண்டார். பாராளுமன்றத்தில் நேற்று (07) செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

(ஜனாதிபதி உரையின் சாராம்சம் பக்கம் மூன்றில் பிரசுரமாகியுள்ளது) தொடர்ச்சி P3

## "ஆணைக்குழு செயற்பாடுகளில் நாங்கள் தலையிட மாட்டோம்"



தேர்தல் தொடர்பில் ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுக்கும். தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் நாம் தலையிட போவதில்லை எனத் தெரிவித்த என பிரதமரும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தன, உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவுக்கு அமைய அரச அதிகாரிகள் செயற்படுவார்கள் என்றார். தொடர்ச்சி P2

## அரசாங்கத்தின் கைக்கூலியாக டக்ளஸ் செயற்படுகிறார்



வடக்கு,கிழக்கு மாகாண மீனவர்களுக்கும், இந்திய மீனவர்களுக்கும் இடையில் மோதல்களை, முரண்பாடுகளை தீவிரப்படுத்தும் வகையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்கத்தின் கைக்கூலியாக செயற்படுகிறார் என, இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியன் குற்றம்சாட்டினார். தொடர்ச்சி P2

## 3 நாள் விவாதம் வேண்டும்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் இன்று (நேற்று) தெரிவித்த கருத்து தொடர்பாக மூன்று நாள்கள் விவாதம் நடத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். தொடர்ச்சி P2




## எறிந்துவிட்டேன்...

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அருகில் நேற்று (07) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைகளை பிரயோகித்துள்ளனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) நீக்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனமும் (IUSF) இந்த எதிர்ப்புப் பேரணியை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலையக எழுச்சியையும், ஈழத் தமிழ் மக்களின் ஆதங்கங்களையும் சொன்னேன்

### பார்த்தசாரதியுடன் சந்திப்புக்கு பின்னர் மனோ தெரிவிப்பு



1983-2023, இடைப்பட்ட இந்த 40 வருடங்களில் நிகழ்ந்துவிட்ட புதிய மாற்றங்களை, என் பார்வையில் அவருக்கு எடுத்து கூறினேன். தமிழ்த் தரப்பில் இந்திய வம்சாவளி மலையக எழுச்சியை பற்றியும், ஈழத்தமிழ் மக்களின் இடை நிற்கும் ஆதங்கங்களைப் பற்றியும் உரையாடினோம். இலங்கை - இந்திய உறவுகள், தொடர்ச்சி P2

## தோணி கவிழ்ந்ததில் குடும்பஸ்தர் பலி

■ வ.சக்தி

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அரசடித்தீவு பிரதேசத்தில் ஆற்றில் தோணி கவிழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் திங்கட்கிழமை (06) மாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கந்தப்பர் வெள்ளத்தம்பி என்பவரே இவ்வனர்த்தத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவ தினத்தன்று மாலை வழக்கம் போல் குறித்த ஆற்றுப்பகுதிக்கு இறால் பிடிப்பதற்கு தனது தோணியில் சென்றிருந்த போது அன்றைய தினம் ஆற்றுப்பகுதியில் திடீரென ஏற்பட்ட அதிகமான காற்றால் குறித்த நபரின் தோணி நீரில் கவிழ்ந்துள்ளது. தொடர்ச்சி P2



## 'வெல்லே சுரங்க'வின் சகோதரரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு; இலக்கு தப்பியது; மனைவியுடன் தப்பினார்

ஒருங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர் மற்றும் போதைப்பொருள் வர்த்தகரான வெல்லே சுரங்கவின் சகோதரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் இலக்கு தவறிவிட்டது. இதனால், அவர் உயிர்தப்பினார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனை, இப்பஹாவத்தை சந்தியிலேயே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நேற்று (07) காலை மேற்கொள்ளப்பட்டுள்ளது என கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனை ரொக்ஹவுஸ் பிரதேசத்தில் வசிக்கும் சனத் ருவன் என்றழைக்கப்படும் வெல்லே சுரங்கவின் சகோதரர், தனது மனைவியுடன்,புதுக்கடையில் நீதிமன்றில் இடம்பெறும் வழக்கில் ஆஜராகுவதற்காக தொடர்ச்சி P2

## கல்முனை கணக்காளரை உடனடியாக நியமிக்கவும்

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு கணக்காளரை உடனடியாக நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கவில்லை என்றால் அதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என இலங்கை தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது, கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காளரை நியமிப்பது தொடர்பில் பிரதமரும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்தனவிடம் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# குடும்பத்தை கொன்ற தந்தை தன்னுயிரையும் மாய்த்தார்

இருபிள்ளைகள், மனைவி ஆகியோர் மர்மமான முறையில் மரணமடைந்து கிடப்பதை கண்டுள்ளார்.

இது தொடர்பில், வவுனியா பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார். சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதேபகுதியை சேர்ந்த சிவபாதசுந்தரம் கௌசிகன் வயது 42, வீட்டின் விறாந்தை பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதுடன், அவரது மனைவியான கௌ.வரதராயினி (வயது 36), இரு பிள்ளைகளான கௌ. மைத்ரா (வயது9) கௌ.கேசரா (வயது3) ஆகியோர் உறங்கியபடியும் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவரும் வவுனியா பொலிஸார் மீட்கப்பட்ட சடலங்களை சட்டவைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இறந்து போனவர் ஒன்லைன் ஊடாக விசா விண்ணப்பங்களை விண்ணப்பிக்கும் பணிகளை முன்னெடுத்தார் என்பதும், அவருடைய மனைவி, ஆசிரியை என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

கடுமையான கடன் சுமையை தாக்கிக்கொள்ள முடியாத காரணத்தால் இவ்வாறான விபரீதமான முடிவை அவர் எடுத்திருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# முந்த முயன்றபோது 2 பஸ்களும் மோதின



வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் பஸ்ஸொன்றுக்கு பின்னால் பயணித்துக்கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ், வளைவொன்றில், அந்த பஸ்ஸை முந்திச் செல்ல முயன்ற போதே, எதிரே வந்த தனியார் பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் நீர்கொழும்பைச் சேர்ந்த 59 வயது நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசாங்கத்தின் கைகூலியாக டக்ளஸ் செயற்படுகிறார்



இலங்கை தமிழர்களின் அரசியல் உரிமைக்கு இந்தியா குரல் கொடுப்பதால் மீனவர் பிரச்சினை ஊடாக இரு நாட்டு தமிழர்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. அதன் ஒரு முயற்சியாகவே டக்ளஸ் செயற்படுகின்றார் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோட்டார வாகனச் சட்டத்தின் கீழ் வெளியான வர்த்தமானி அறிவித்தலின் கட்டளைகள் மீதான விவாத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் பேசுகையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பொருளாதார ரீதியில் தன்னிச்சையாக முன்னேற்றமடையும் திறன் கொண்டவர்கள். அரசின் தவறான தீர்மானங்களினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண விவசாயம்,கால்நடை அபிவிருத்தி மற்றும் மீன்பிடி கைத்தொழில் ஆகிய துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. நெல்லுக்கான உத்தரவாத விலையை 100 ரூபாவாக வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்,ஆனால் வடக்கு மாகாண விவசாயிகளிடமிருந்து 40 முதல் 60 ரூபாக்கு நெல் கொள்வனவு செய்யப்படுகிறது.

கிழக்கு மாகாண ஆளுநரின் முறையற்ற செயற்பாடுகளினால் கிழக்கு மாகாணத்தில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் தமிழர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். மட்டக்களப்பு மயிலத்தமடு மேய்ச்சல் தரை பகுதியில் மாடுகள் வெட்டியும்,சுட்டும் கொல்லப்படுகின்றன. இவற்றை பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வடக்கு , கிழக்கு மாகாணங்களின் மீன்பிடி கைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண மீனவர்களுக்கும்,இந்திய மீனவர்களுக்கும் இடையில் மோதல்களை , முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்தின் கைகூலியாக செயற்படுகின்றார்.இலங்கை தமிழர்களின் அரசியல் உரிமைக்கு இந்தியா குரல் கொடுப்பதால் மீனவர் பிரச்சினை ஊடாக இரு நாட்டு தமிழர்களுக்கு இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது,அதற்கு சார்பாக கடற்றொழில் அமைச்சர் செயற்படுகிறார். இவ்வாறானவர்களை யாழ்ப்பாண மக்கள் இனிமேல் தேர்தலில் தெரிவு செய்யக்கூடாது என்றார்.

# 3 நாள் விவாதம் வேண்டும்



நேற்று (07) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் தற்போதைய நாட்டின் நிதி,பொருளாதார நிலைமை ,ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து .தெரிவித்திருந்தார் இக்கருத்துக்கள் தொடர்பிலேயே எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மூன்று நாட்கள் விவாதம் நடத்தப்பட வேண்டும் எனவும்இது தொடர்பான விவாதத்தை அடுத்த அமர்வில் நடத்துமாறும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

# மலையக எழுச்சியையும், ஈழத் தமிழ் மக்களின் ஆதங்கங்களையும் சொன்னேன்

சர்வதேச புதிய நியமங்கள் பற்றியும் உரையாடினோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி யின் இலங்கைக்கான விசேட தூதுவர் "ஜீபி" என்றழைக்கப்படும் கோபாலசுவாமி பார்த்தசாரதி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனை கொழும்பில் நேற்று (07) சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது இந்திய தூதரக இரண்டாம் செயலாளர் அசோக்குமார் உடனிருந்துள்ளார். இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி கூறியதாவது, கொடுமையான நாட்களில், இலங்கை, இ ந்தியா, தமிழர்கள், சிங்களவர்கள் ஆகிய அனைத்து தரப்புகளுக்கும் இடையே இயன்ற வரையில் நெகிழ்வு தன்மையுடன் சுழன்றோடி நம்பிக்கை தந்த கடும் பணிகளை ஆற்றியவர், கோபாலசுவாமி பார்த்தசாரதி. அந்த கொடும் நாட்களை கடந்து வந்தவர்கள் பார்த்தசாரதியை மறக்க முடியாது.தற்போது புதுடெல்லி வான்வெளி சக்தி தொடர்பான இந்திய நிறுவனத்தில் இயக்குனராகவும், ஜம்மு பல்கலைக்கழகத்தின் உத்தியோகப்பூர்வ வேந்தராகவும், இந்திய கொள்கை வகிப்பில் உத்தியோகப்பற்றற்ற பங்காளராகவும் பணி செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது,

# “ஆணைக்குழு செயற்பாடுகளில் நாங்கள் தலையிட மாட்டோம்”

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் நிறைவு பெறும். உள்ளூராட்சிசபைத் தேர்தல் வாக்கெடுப்புக்கான புதிய திகதி அறிவிப்புக்கு 21 நாள் காலவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று (07) செவ்வாய்க்கிழமை நிலையியற் கட்டளை கீழ் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த பிரதமர் மேலும் கூறுகையில், தேசிய பாதுகாப்புச் சபை கூட்டம் கூடவில்லை என எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்ட விடயம் அடிப்படையற்றது.. ஜனாதிபதி தலைமையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை காலையும் தேசிய பாதுகாப்பு சபை கூடுகிறது. திறைச்சேரியின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு செல்வதை தடுப்பதற்காகவே அவர் தேசிய பாதுகாப்பு சபைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிடுவதும் அடிப்பமையற்றது. தேசிய பாதுகாப்பு சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அதனை மறுக்க முடியாது என்றார்.

தேர்தல் ஆணைக்குழு விடுத்த அழைப்பு தொடர்பில் திறைச்சேரியின் செயலாளர் ஆணைக்குழுவுடன் பேசி ஒரு தீர்மானத்தை எடுப்பார் என்றார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிசபைகள் அமைச்சர் என்ற ரீதியில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் பலமுறை பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளேன். தேர்தல் திருத்தச்சட்டம் ,தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு பல யோசனைகளை முன்வைத்துள்ளது. சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றார்.



கட்டுப்பணம் ஏற்றல் பணியில் இருந்து மாவட்ட செயலாளர்களை விலகிக் கொள்ளுமாறு அறிவிக்கும் தீர்மானத்தை அமைச்சரவை எடுக்கவில்லை. தவறுதலாக வெளியிட்ட அறிக்கையை பொதுநிர்வாக அமைச்சர் மறுகணமே திருத்திக்கொண்டார். தேர்தல் செயற்பாடுகளுக்கு தடையேற்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது என்றார்.

உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் நிறைவு பெறும். உள்ளூராட்சிசபைத் தேர்தல் வாக்கெடுப்புக்கான புதிய திகதி அறிவிப்புக்கு 21 நாள் காலவகாசம் வழங்கப்பட வேண்டும்.தேர்தல்தொடர்பில் ஆணைக்குழு ஒரு தீர்மானத்தை எடுக்கும் என எதிர்பார்க்கிறோம்,தேர்தல்கள் ஆணைக்குழு வின் செயற்பாடுகளில் தலையிட போவதில்லை என்றார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்,மக்களின் ஜனநாயக வாக்குரிமை தொடர்பில் தற்போது போர்கொடி தூக்குபவர்கள் மாகாண சபைத் தேர்தலை மறந்து விட்டார்கள். கடந்த அரசாங்கம் மாகாண சபை திருத்தச்சட்டத்தை உருவாக்கி மாகாண சபைத் தேர்தலை முழுமையாக இல்லாதொழித்துள்ளது. ஆகவே மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமைக்கு தற்போதைய எதிர்க்கட்சிகள் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள் என்றார்.

# தோணி கவிழ்ந்ததில் குடும்பஸ்தர் பலி

அதனை கண்ட அருகில் மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்கள் குறித்த நபரினை மீட்டெடுத்து மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்ர் போலின் உத்தரவுக்கு அமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெல்லே சுரங்கவின் சகோதரரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு...

வந்துகொண்டிருந்த போதே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணையே நேற்று (07) தவணையிட பட்டிருந்தது.

இப்பாங்வெல சந்தியில், வெகனார் வகையைச் சேர்ந்த கார், இடது பக்கமாக ஓட்டோவை முந்தி சென்று நிறுத்தப்பட்டது. அதிலிருந்து இறங்கிய நபரொருவர் ரி.56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி, ஓட்டோவின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

அப்போது ஓட்டோவின் சாரதி, ஓட்டோவை அவ்விடத்திலேயே கைவிட்டு தப்பியோடிவிட்டார். பின் ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணித்த வெல்லே சுரங்கவின் சகோதரர், ஓட்டோவில் இருந்து தப்பியோடியுள்ளார். மனைவியும் தப்பியோடியுள்ளார். எனினும், துப்பாக்கிதாரி அவரை இலக்குவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இருந்து வெற்றுதோட்டாக்கள் நான்கு கண்டெடுக்கப்பட்டன. துப்பாக்கிச் சின்னங்கள் அவ்விடத்திலிருந்த மதிலை துளைத்துச் சென்றமைக்கான அடையாளங்கள் காணப்பட்டன எனத் தெரிவித்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# கல்முனை கணக்காளரை உடனடியாக நியமிக்கவும்

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பது 1993ஆம் ஆண்டு வர்த்தமானி ஊடாக பிரதேச செயலகமாக அறிவிக்கப்பட்ட ஒரு பிரதேச செயலகம். இதற்கு கணக்காய்வாளர் இல்லை என்று சொல்வதோ அல்லது நியமிக்கப்படவில்லை என்று சொல்லுவதோ ஓர் அலட்சியமான பதிலாகும் என்றார்.

இலங்கையில் பிரதேச செயலகம் ஒன்றுக்கு கணக்காய்வாளர் தேவையில்லை என்று நீங்கள் எவ்வாறு கூறலாம்? இது முற்றுமுழுதாக ஒரு தவறான விடயம். உங்களுடைய பொது நிர்வாக அமைச்சினுடைய செயல்பாடுகள் மிகவும் மோசமாகவுள்ளன என்றார்.

உங்களுடைய பகுதியிலுள்ள பிரதேச செயலகத்திற்கு கணக்காய்வாளர் இல்லை என்றால் அது தேவையில்லாத விடயம் என நீங்கள் கூறுவீர்களா?29 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு பிரதேச செயலகம். அங்கு நிதியினை கையாள முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

கடந்த 2019ஆம் ஆண்டு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காய்வாளரை நியமிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். ஆனால் இதுவரை நியமிக்கப்படவில்லை. தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் ஒரு இரவில் இதனை செயற்படுத்துவோம் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். அதேபோன்று கணக்காய்வாளரை நியமிக்காவிட்டால் நிர்வாகத்தினை முடக்குவோம் என்று இராஜாங்க அமைச்சர்களான வியாழேந்திரன், பிள்ளையான் போன்றவர்கள் கூறினார்கள் . ஆனால் இன்று அவர்கள் அமைதியாக இருக்கின்றார்கள். அதேபோன்று கருணா அம்மானும் இதுகுறித்து பேசினார் ஆனால் இதுவரை எதுவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றார். எனவே, உடனடியாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கு கணக்காய்வாளரை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படவில்லை என்றால் அதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்றார்.





தனது கடமையைச் செய்யும் வரை

# நாங்கள் காத்திருப்போம்

1) அரசாங்கத்தால் வேலைத்திட்டம் சீர்குலைந்தால், 2022 பெப்ரவரி மாத நிலைமையைவிட மிகவும் ஆபத்தான நிலைக்கு நாடு தள்ளப்படலாம்.

2) ஜூன் 2022 முதல் நிலவி வந்த பொருளாதாரப் பிரச்சினைகள், படிப்படியாக ஓரளவுக்குத் தீர்க்கப்படும்.

3) 2019 பிற்பகுதியில் அமல்படுத்தப்பட்ட வரிக் குறைப்புகளுக்குப் பிறகு, அரசாங்க வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8% ஆகக் குறைந்தது. சீர்செய்ய புதிய வரிக் கொள்கைகளை முன்னெடுக்க நேரிட்டது.

4) 2022 செப்டெம்பரில் சராசரி பணவீக்கம் 70% வரை உயர்ந்தது. உணவு பணவீக்கம் 90 % தாண்டியது. ஆனால், தற்போது பணவீக்க வேகம் 50 % வரை குறைந்துள்ளது. அத்தோடு உணவு பணவீக்கமும் 54 % ஆகக் குறைந்துள்ளது.

5) நாட்டின் அந்நிய செலாவணி நெருக்கடி குறித்து 2021 முதல் சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து எச்சரித்தது. 2022 நடுப்பகுதியில் இருந்து IMF உடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன. 2022 செப்டெம்பர் முதலாம் திகதியில் IMF உடன் அதிகாரிகள் மட்ட உடன்பாட்டை எட்டினோம்.

6) சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து நிதி உத்தரவாதக் கடிதத்தை நேற்று முன்தினம் இரவு பெற்றோம். அதன்படி அன்றிரவே நானும் மத்திய வங்கி ஆளுநரும் இணக்கப்பாட்டுக் கடிதத்தில் கையொப்பமிட்டு சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பி வைத்தோம்.

7) வரிச்சுமை அதிகமாக உள்ளதாக தொழில் வல்லுநர்கள் கூறுகின்றனர். இருப்பினும், இந்த நிலைமை ஒரு குறுகிய காலத்துக்குப் பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், 2022 பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இருந்த நிலையை விட மிகவும் ஆபத்தான இடத்திற்கு நாடு தள்ளப்படலாம்.

8) கருத்துகளை வெளியிடும் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதனை அமைதியாகச் செய்யுங்கள். கூட்டங்கள் நடத்துவதும், போராட்டம் நடத்துவதும் ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இப்போராட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால், அதற்கு எதிராக இந்த அரசாங்கம் கடுமையாகச் செயற்படும்.

9) இப்போது டொலர் விலை குறைந்து வருகிறது. ஜூலை 9ஆம் திகதி இந்த நாடு வீழ்ந்திருந்தால் இன்று இந்த நிலை இருந்திருக்காது. அப்போது யாரின் உதவியும் இருக்கவில்லை. இதற்கு நடவடிக்கை எடுத்த முப்படை மற்றும் பொலிஸாருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

10) இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பயணத்தில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சியை நான் கேட்டுக்கொள்கிறேன். இதனை நிறைவேற்றிய பின்னர், ஜனாதிபதி தேர்தலா, பொதுத் தேர்தலா எது தேவை என்பதை தீர்மானிக்க முடியும்.

11) எதிர்கால பயணம் மற்றும் திட்டங்கள் தொடர்பில் நாம் புதிய வரைபு ஒன்றை சமர்ப்பிக்க இருக்கிறோம். அதனை தேசிய சபைக்கும் வழங்குவோம். பாராளுமன்றத்தில் ஆராய்ந்து உடன்பாடு எட்டப்பட்ட பிறகு, நீண்ட கால மற்றும் நடுத்தர கால திட்டத்தை முன்வைப்பேன்.

12) தற்போது, பாராளுமன்றத்தின் தேசிய சபைக் குழுக்களிடமிருந்து பல அறிக்கைகள் கிடைத்துள்ளன. அதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். ஆனால் 08 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் இப்பணியை எங்களால் முடிக்க முடிந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவோம்.

13) பணப் பரிமாற்ற விதிகளை கடுமையாக்கவும், இறக்குமதியை கட்டுப்படுத்தவும் நேரிட்டது.

14) இலங்கை ஒரு வங்குரோத்து பொருளாதாரமாக அன்று தொடக்கம் செயற்பட்டது. அதன் பாதகமான விளைவுகளை நீங்கள் அனைவரும் அனுபவித்திருக்கிறீர்கள். 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், இந்த நாடு எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள், மின்வெட்டு, உணவுப் பற்றாக்குறை, மருந்துகளை வாங்குவதில் உள்ள சிரமங்கள், பணவீக்கம், ரூபாயின் வீழ்ச்சி மற்றும் வறுமை அதிகரிப்பு போன்ற பல பிரச்சினைகளை சந்தித்துள்ளது. இலங்கையில் இவ்வாறான ஒரு அவல நிலை நவீன வரலாற்றில் இருந்ததில்லை என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும்.

# பிரதமர் கூறியது பொய்

கட்டுப்பணம் ஏற்றல் பொறுப்பில் இருந்து, மாவட்ட செயலாளர்களை விலகுமாறு அமைச்சரவை தீர்மானிக்கவில்லை என பிரதமர் சபையில் கூறியது பொய். இவ்விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீளப்பட்டுள்ளது. எனவே பாராளுமன்ற சிறப்புரிமை குழு ஊடாக இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டுமென விஜித ஹேரத் எம்.பி வலியுறுத்தினார்.



பாராளுமன்றத்தில் நேற்று (07) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோட்டார் வாகனச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் தொடர்பில் வெளியான வர்த்தமானி கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசுகையில்,

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு கண்டு விட்டோம் என அரசு குறிப்பிடுகிறது. அவ்வாறாயின் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும். சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக அரசு பல்வேறு சூழ்ச்சிகளை முன்னெடுத்து வருகிறது. உயர்நீதிமன்றம் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவே தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

பொருளாதார மீட்சிக்கு அரசு மேற்கொண்டுள்ள தீர்மானங்கள் சரியா அல்லது பிழையா என்பதை அரசாங்கம் அறிந்து கொள்ள வேண்டும். மக்களின் ஆதரவு இல்லாமல் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது. ஆகவே உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த அரசு பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

# இரு தரப்பு நிபந்தனைகளை சபைக்கு சமர்ப்பிக்கவும்

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மற்றும் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ள நிபந்தனைகள் ஆகியவற்றை பாராளுமன்றத்துக்கு அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற சபை அமர்வின் போது, விசேட கூற்றை முன்வைத்து மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உண்டு என குறிப்பிடப்படுகிறது. ஆனால், நிதி அதிகாரத்தில் ஜனாதிபதி தன்னிச்சையாகச் செயற்படுகிறார். சர்வதேச நாணய நிதியத்தின் அடிப்படை நிபந்தனைகளை நிறைவேற்றியுள்ளதால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதி ஆகியோர் குறிப்பிடுகிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவுள்ளதை நாங்கள் எதிர்க்கவில்லை. இருப்பினும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் என்ன என்பதை பாராளுமன்றமன்றத்திற்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு,ஆகவே பாராளுமன்றத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது மக்களால் வெறுக்கப்படும் சொற்ப அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமைய பாராளுமன்றத்துக்கு புறம்பாக செயற்படுகிறார் என்றார்.



# மயந்தவின் இராஜினாமா கடிதம் கிடைத்தது

அரசாங்க நிதிக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. மயந்த திஸாநாயக்க குறித்த பதவியில் இருந்து விலகுவதாக எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றம் சபாநாயகர் தலைமையில் நேற்று (07) செவ்வாய்க்கிழமை காலை கூடிய போதே இந்த அறிவிப்பை சபாநாயகர் விடுத்தார்.

அரசாங்க நிதிக்குழுவின் தலைவர் பதவியில் இருந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. ஹர்ச டி சில்வா, அப்பதவியில் இருந்து அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக அதே கட்சியைச் சேர்ந்த எம்.பி.யான மயந்த திசாநாயக்க தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பை வெளியிட்டது .

இந்நிலையிலேயே அரசாங்க நிதிக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. மயந்த திஸாநாயக்க எழுத்து மூலம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளார்.



அலுவலக ஊழியர்களுக்காக

# வீதிச் சோதனை சாவடிகள் அகற்றப்பட்டன

அபு அலா

நிந்தவூர் இளைஞர் தன்னார்வ அணியின் வேண்டுகோளின் பிரகாரம், நிந்தவூர் பிரதான வீதியிலும், அக்கரைப்பற்று - அம்பாறை பிரதான வீதியிலும் அமைந்துள்ள இராணுவ சோதனைச் சாவடிகளை வாரநாள்களில் காலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை அகற்றுவதற்கு, இராணுவத்தின் 24 ஆம் காலாட் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்த்ரசிறி அனுமதி வழங்கியுள்ளார்.



நேற்று முன்தினம் (06) மல்வத்தையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் 24 ஆம் காலாட் படைப்பிரிவின் இராணுவ முகாமில் நடைபெற்ற சினேகபூர்வ சந்திப்பின்போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

குறிப்பாக, இந்த வீதிகளின் ஊடாக அதிகமான உத்தியோகத்தர்கள் காலை வேளையில் அலுவலகங்களுக்குச் செல்லும்போது, இந்தச் சோதனைச் சாவடியில் தரித்து நிற்பதால், அலுவலக கடமை நேர கைவிரல் அடையாளப் பதிவின் போது, தாமதமாகப் பதிவு செய்ய வேண்டிய அசௌகரியமான நிலைமைக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த விடயம் பற்றி, நிந்தவூர் இளைஞர் தன்னார்வ அணியின் செயற்பாட்டாளர்களான ஊடகவியலாளர் சுலைமான் றாபி, கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளர் சபை உறுப்பினரும், கிழக்கு மாகாண ஆளுநரின் ஆயுர்வேத துறைக்கான இணைப்பாளருமான சுலைமான் நாசிறூன் ஆகியோர், இலங்கை இராணுவத்தின் 24 ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்த்ரசிறியின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, குறித்த வீதிகளிலுள்ள இராணுவ வீதிச் சோதனைச் சாவடிகளை அகற்ற அனுமதி வழங்கப்பட்டது.



## நஸீருக்கு பாராட்டு விழா

சம்மாந்துறை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், கிழக்கு மாகாண பேரவை சபை செயலாளராக பதவியேற்ற இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட அதிகாரி எம்.எம் நஸீரை பாராட்டும் நிகழ்வு, சம்மாந்துறை லயன்ஸ் கழகத் தலைவர் கலாநிதி இஸட்.ஏ பஸீர் தலைமையில் சம்மாந்துறை கமு/சது/ அல்-மர்ஜான் மகளிர் தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

## நூல்கள் அன்பளிப்பு



சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம் அஷ்ரப் வித்தியாலய நூலகத்துக்காக ஓய்வு பெற்ற முன்னாள் கோட்டக் கல்வி பணிப்பாளரும் கல்முனை ஸாஹிரா கல்லூரி முன்னாள் அதிபருமான பிரபல எழுத்தாளர் ஏ. பீர்முஹம்மது, ஒரு தொகுதி நூல்களை லீடர் அஷ்ரப் வித்தியாலய அதிபர் எம்.ஐ சம்சுதீனிடம் கையளித்தார்.

திருகோணமலை சாலை முகாமையாளரை

## நீக்குமாறு கோரி பணிப்புறக்கணிப்பு

தற்போதுள்ள முகாமையாளரை நீக்கி, தகுதியான முகாமையாளரை நியமிக்குமாறு கோரி, திருகோணமலை, உப்புவெளியில் உள்ள இலங்கை போக்குவரத்து சபை சாலையில் ஊழியர்கள் நேற்று (07) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தார்கள்.

'திருமலை சாலை பேருந்து நேரங்களை தனியாருக்கு விற்கும் முகாமையாளர் எமக்கு வேண்டாம்', 'எமது சாலையின் சாரதிகளின் இடமாற்றங்களை உடனடியாக இரத்துச்செய்', 'தகுதியில்லாத முகாமையாளரை நீக்கி, தகுதியானவரை நியமி' போன்ற பல வாசகங்களை காட்சிப்படுத்தி ஊழியர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். நேற்று, திருகோணமலை பஸ் டிப்போவில் இருந்து எந்த பஸ்களும் சேவையில் ஈடுபடவில்லை.



## கிளிமூக்கு சேவல் கண்காட்சி



அகில இலங்கை ரீதியான கிளி மூக்கு சேவல்களுக்கான கண்காட்சி, காத்தான்குடியில் ஞாயிற்றுக்கிழமை (05) நடைபெற்றது.

இக்கண்காட்சியில் சுமார் 60 சேவல்கள், 45 வளர்ப்பாளர்களுடன் கலந்து கொண்டன. பல நாடுகளில் அழகுக்காக வளர்க்கப்படும் கிளிமூக்கு சேவல்கள் (Parrot Beak) மனிதர்களுடன் பாசத்தோடு பழகும் பண்பு கொண்டவையாகும்.

இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக இடம்பெற்ற இத்தகைய கண்காட்சி ஊடாக, சர்வதேச தரத்திலான கிளிமூக்கு சேவல்கள் எம் நாட்டிலும் இருக்கின்றன என்பதை சர்வதேசத்துக்கு பறைசாற்றும் பொருட்டு அமைந்துள்ளது என்றும், இதன்மூலம் வெளிநாடுகளிலுள்ள வளர்ப்பாளர்கள், இலங்கையில் நல்ல தரத்திலான கிளிமூக்கு சேவல்கள் இருப்பதை அறிந்து, கேள்விகளும் ஏற்றுமதிகளும் அதிகரிக்கலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



## மட்டக்களப்பு சிறைச்சாலையில் குருதிக்கொடை

எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு சிறைச்சாலையின் ஏற்பாட்டில், குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் என். பிரபாகரன் தலைமையில் திங்கட்கிழமை (06) மட்டக்களப்பு சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்றது.



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில், 'உதிரம் கொடுப்போம்; உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில், மட்டக்களப்பு சிறைச்சாலை, கல்முனை சிறை கூடம் மற்றும் கைதிகளின் நலன்புரி சங்கம் என்பவற்றால் இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மன்னார் தீவில் காற்றாலை மின்சாரம் செயற்றிட்டம்

# பாதிப்புகள் குறித்து பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள்

### மன்னார் பிரஜைகள் குழு முழுமூச்சில் இறங்கியது

எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் தீவுப் பகுதியில் அமைக்கப்பட உள்ள இரண்டாம் கட்ட காற்றாலை மின்சாரம் தொடர்பாக, மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை (06) பிரஜைகள் குழு அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.



மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர், பொது அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகள் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதன் போது, சட்ட நடவடிக்கைகள், பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ள நிலையில், தீவுப் பகுதி மக்களிடமும் பல்வேறு அமைப்புகள் உள்ளிட்ட தரப்பினரிடம் கையெழுத்து பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் சர்வதேச ரீதியிலும் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக குறித்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின்சாரம் அமைப்பது தொடர்பாக, மன்னார் பிரஜைகள் குழு மற்றும் பொது அமைப்புகள் என்பன பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் சந்தர்ப்பத்தில், மன்னார் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் ஊடாக மன்னார் மாவட்ட பகுதி மக்களிடம் இரண்டாம் கட்ட காற்றாலை மின்சாரம் அமைப்பதற்கான சுற்றுப்புற சூழல் தொடர்பான அறிக்கைகளை மக்களிடமிருந்து அரசாங்கம் கோரி இருப்பதற்கு அமைவாக, குறித்த அறிக்கை ஏப்ரல் மாதம் ஆறாம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



## சிறுநீரக சிகிச்சை நிலையம்

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில், சிறுநீரக நோயாளர்களுக்காக குருதி மாற்றும் சிகிச்சை நிலையம் கனடாவில் வசிக்கும் செந்தில்குமரன் நிவாரண நிதியத்தின் ஊடாக 36 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது. இந்நிலையத்தின் திறப்புவிழா, முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் உமாசங்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திரு திருமதி செந்தில்குமரன், மாவட்ட மருத்துவமனை பணிப்பாளர் டொக்டர் வாசுதேவ், சிறுநீரக வைத்திய நிபுணர் டொக்டர் பவானந்தன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

செ. கீதாஞ்சன்

சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை

## கட்டுப்படுத்த போதிய ஆளணி வளம் இல்லை

### கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களம் தெரிவிப்பு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான உற்பத்தியையும் விற்பனைகளையும் கட்டுப்படுத்த, போதிய ஆளணி வளங்களின்மையே காரணம் என மதுவரித் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தி, விற்பனை தொடர்பில் பொலிஸாருக்கோ, மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கோ தகவல்களை வழங்கும் போது, எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை என்று பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முட்கொம்பன் பகுதியில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தி, விற்பனை தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட மதுவரி திணைக்களத்துக்கு பலதடவைகள் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என பிரதேச பெண்கள் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக, மேற்படி திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, “எங்களிடம் போதிய ஆளணி வளம் இன்மை காரணமாகவே, எமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது இருக்கிறது. குற்றச்செயல் இடம்பெறும் இடத்துக்கு, மதுவரி பரிசோதகர் ஒருவருடன் ஏனைய அதிகாரிகள் சென்று, கைது நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் மது வரி பரிசோதகர் இல்லாத காரணத்தால் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது இருக்கிறது“ என்று தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த வளாகத்தில் இயங்கும் வட மாகாண மதுவரித் திணைக்கள அலுவலகத்திலும் மது ஆணையாளர், மது அத்தியட்சகர் ஆகிய இருவர் மாத்திரமே கடமையில் உள்ளனர்.

மேற்படி அலுவலகத்துக்கு தேவையான ஆளணி வளங்கள் இதுவரை நிரப்பப்படாத நிலை காணப்படுவதாலேயே, குறித்த பிரதேசங்களில் இடம்பெறுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு இயலாமல் இருப்பதாகவும் மேற்படி அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலய யாத்திரை

சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி, பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருத்தல யாத்திரைக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச செயலாளர் த. அகிலன் தெரிவித்துள்ளார்.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருத்தல யாத்திரை, இன்று (08) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தேவாலயத்துக்குச் செல்லும் பக்தர்களுக்கான போக்குவரத்துகள் யாவும் வலைப்பாட்டில் இருந்து மேற்கொள்ளப்பட உள்ளதுடன், மருத்துவ சேவைகள், குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளும் உரியவாறு மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு

சண்முகம் தவசீலன்

கிறிசலிஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம், குடிசார் அமைப்புகளின் சம்மேளனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு, நேற்று (07) கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது, கிளிநொச்சி கல்வி திணைக்கள ஓய்வுநிலை உதவி கல்வி பணிப்பாளர் செல்லத்துரை விந்தன், அ. சத்தியானந்தம், பிரதீப்ராஜா ஆகியோரின் நெறியாள்கையில் சுயாதீன அரங்க செயலாற்றுநர்களால் 'கழுமரம்' எனும் போதைப்பொருள் விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது.



# வேதனமானது வேதனையானது

அதிகரித்து வரும் வாழ்க்கை செலவுக்கு ஏற்றால் போல, பெருந்தோட்ட மலையக தொழிலாளர்களின் ஒரு நாள் வேதனம் 3,250 ரூபாயாக அதிகரிக்கப்படல் வேண்டும். சம்பள நிர்ணய சபையும் தொழில் அமைச்சும் உடனடியாக ஒன்று கூடி பெருந்தோட்ட மலையக மக்களின் வேதனம் தொடர்பில் தீர்மானம் மிக்க முடிவு எட்டப்படுதல் அவசியம் ஆகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

காலையில் எழுந்தவுடன் மலையேறி மாலை சாய்ந்தவுடன் மனைதேடி, இந்நாட்டின் பொருளாதாரத்தை தனது முதுகில் சுமந்து நாட்டையும் வீட்டையும் கட்டியெழுப்பும் எனது பெருந்தோட்ட தாய்மாருக்கு, அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும். இன்று எமது மலையகத்தில், எனது தொப்புள்கொடி உறவுகளான தாய்மாருக்கு எனது சிரம் தாழ்த்திய கௌரவிப்பு



உரித்தாகட்டும் என்றார்.

எமது மலையகத்தினை பொறுத்தவரையில் கல்வியறிவிலும் சரி, தொழிற்றுறையிலும்சரி ஆண்களுக்கு நிகராக பெண்களும் செயலாற்றி வருகின்றனர். அது எமது சமூகத்தின் வளர்ச்சியில் பாரியதொரு சாதனையாகவே பார்க்கின்றேன். அதிபர்களாக, ஆசிரியர்களாக, வைத்தியர்களாக, சட்டத்தரணிகளாக மட்டுமன்றி ஊடகத்துறையிலும் சாதனைகளை எமது மலையக பெண்கள் படைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் இந்நாட்டின் தூண்களாக இருந்து, எமது மலையக சமூகம் உட்பட இந்நாட்டின் அபிவிருத்திக்கு துணைநின்று, சர்வதேச ரீதியில் பாரதி கண்ட புதுமைப் பெண்களாக மிளிர வேண்டுமென சர்வதேச மகளிர் தினமான இன்றைய தினம் வாழ்த்துகின்றேன் என்றார்.

# "மாற்றத்தை கொண்டுவர முடியும்"

இந்நாட்டின் ஒவ்வொரு வளர்ச்சிக்கு முன்னாலும் பின்னாலும் பெண்கள் இருக்கிறார்கள். பன்முக திறமைகள் கொண்ட பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உருவாக்கிய மாற்றங்கள் அதிகம். பெண்களுக்கான சம உரிமை, பொருளாதார சுதந்திரமே ஒரு சமூகத்தின் வெற்றியாக பார்க்கப்படுகிறது என்று தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், அனைத்து துறைகளிலும் வெற்றி நடைபோடும் அனைத்து மகளிருக்கும் தன்னுடைய இனிய மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

பெண் என்பவள் இந்தத் தேசத்தைக் கட்டியமைக்கும் வலிமை கொண்டவள். ஒரு குடும்பத்தை முன்னேற்றவும் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் பெண்களின் பங்கு என்பது அளப்பரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளுடன்



ஒப்பிடப்படுமிடத்து, பெண்களுக்கான வாய்ப்புகள் அதிகளவில் வழங்கப்படும் இடத்தில் இலங்கை காணப்படுகிறது. அதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, இலங்கையில் பெண்கள் வேலைக்கு சென்ற முதல் சமுதாயம் மலையகமே. மலையக பெண்களின் தைரியமான செயற்பாட்டால், நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டது. நாட்டிற்கே முன்னுதாரணமாகச் செயற்பட்டவர்கள் மலையக பெண்களே. எனவே அனைத்துத் துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மேலும் அதிகரிக்கபட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அனைத்துத் துறைகளிலும் சமஅந்தஸ்து பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்குதாரர்களாக பெருந்தோட்டப் பெண்கள் உள்ளனர் என்பதை எவரும் மறுக்க முடியாது.

பெண்கள் நினைத்தால் இந்தச் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தையும் கொண்டுவர முடியும். அத்தகைய மாற்றத்தின் தொடக்கமாக நம்முடைய இல்லங்கள் அமையட்டும்.

பெண்களை மதித்து கொண்டாடுவதுடன் அவர்களின் கரங்களை வலுப்படுத்துவதையும் நாம் அனைவரும் நம்முடைய வீடுகளிலிருந்து தொடங்குவோம் என தனது வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

# காதலியின் தாய்மீது அசிட் வீசிய சிப்பாய் கைது

■ ராமு தனராஜா

பண்டாரவளை, எலபெத்த கும்புர, தகுன கெபிலேவெல பகுதியில் பெண்ணொருவர் மீது அசிட் வீச்சு தாக்குதல் நடத்திய முன்னாள் இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் மகளின் காதலன் எனக் கூறப்படும் பண்டாரவளை பகுதியை சேர்ந்த இராணுவ பொறியியலாளர் பிரிவில் கடமை புரிந்து, தற்போது இராணுவத்துக்குச் செல்லாது தலைமறைவாகி இருந்த 23 வயதுடைய இளைஞனே இந்த அசிட் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

அசிட் தாக்குதலுக்கு இலக்கான பெண்ணின் தாய், பதுளை வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதோடு குறித்த பெண்ணுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

இதையடுத்து 23 வயதுடைய முன்னாள் இராணுவ சிப்பாய் பண்டாரவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த சந்தேக நபரை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹோல்புறுக் தேர்த்திருவிழா

அக்கரப்பத்தனை, ஹோல்புறூக் நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா சனிக்கிழமை (04) காலை 7. 30 மணிக்கு விநாயகர் வழிபாடுகள் இடம்பெற்று, கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது.

அதனை தொடர்ந்து, ஆகுரோயா ஆற்றிலிருந்து பாற்குடம் பவனி, பக்தர்களின் 'அரோஹரா' கோஷத்தோடு மேள வாத்தியம் முழங்க, ஆலயத்தை வந்தடைந்தது.

திருவிழாவில் 06 ஆம் திகதி, காலை 7 மணி தொடக்கம் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்று, வசந்த மண்டப பூஜை சிறப்பாக நடைபெற்றதோடு மும்மூர்த்திகள் உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து முத்தேர் பவனி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

துவாரகஷான்





# கனவில் வந்தார் தாத்தா; பேரன் அதிரடியாக கைது



■ சுமணசிறி குணதிலக

மொனராகலை பொலிஸ் பிரிவின் குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய, கரவிலகன்ன பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்குள் புதையல் தோண்டிக்கொண்டிருந்த 42 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த வீட்டுக்குள் அகழ்வதற்காக பயன்படுத்தப்பட்ட உபரணங்களும் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

மரணமடைந்த தன்னுடைய தாத்தா ஒருநாள் கனவில் வந்தார். வீட்டுக்குள் ஓரிடத்தில் புதையல் இருக்கிறது. அதனை அகழ்ந்து எடுத்துக்கொள்ளுமாறு தன்னிடம் கூறினார் என பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ள அவர் (பேரன்) அதனால்தான் அகழ்ந்தேன் என்றும் தெரிவித்துள்ளார்.

கனவில் வந்த தாத்தா என்னிடம் கூறியதை முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை எனினும், இரண்டாவது தடவையாகவும் வந்தவர், மீண்டும் அதையே கூறினார். சுமார் 12 அடிக்கு ஆழமாகத் தோண்டுமாறு கோரினார். அதனடிப்படையிலேயே வீட்டுக்குள் அகழ்ந்தேன் என்றும் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரின் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளாத அதிகாரிகள் அவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

# "ஈழத்தமிழர் ஈழவரே; எங்கிருந்தாலும் நம்மவரே"

■ செ.தி.பெருமாள்

"ஈழத்தமிழர் ஈழவரே; எங்கிருந்தாலும் நம்மவரே" என்று ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் இரா. ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்தார்.

நாட்டிலும் சமூகத்திலும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படக்கூடிய நேர்மையான தூய்மையான அரசியல் செயற்பாட்டாளர்களை பயிற்றுவித்து அனுப்புவதை இலக்காகக் கொண்டே இன்று 'தோழர் இரட்னசபாபதி அரசியல் கற்கைகள் நிலையம்' ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் மொழி மூலமாக ஆரம்பிக்கப்படும் நிலையத்தின் பணிகள் விரைவில் நாட்டில் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவதோடு சிங்கள மொழி மூலமான கற்பித்தல் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றார்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஏழு ஆண்டுகளை நிறைவு செய்து, எட்டாவது ஆண்டு தொடக்க தினமான கடந்த பெப்ரவரி 28ஆம் நாள் ஹட்டன் நகரில் ஈரோஸ் அமைப்பின் நிறுவுநர் தோழர் இரட்னசபாபதியின் பெயரில் மேற்படி கற்கைகள் நிலையம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் விசேட அழைப்பாளராக ஹட்டன் நகர சபை உறுப்பினர் கேசவமூர்த்தி உட்பட ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், கட்சித்தோழர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்பேசும் சமூகங்கள் பிரதேசத்தாலும் மதத்தாலும் சிதறி, பேரினவாத ஒடுக்குமுறையிலும் முதலாளித்துவ சுரண்டலிலும் அல்லலுற்ற வேளை மதத்தால் இந்துவானாலும் மாண்பில் முஸ்லிம் என்றாலும் கிறிஸ்தவனும் தீரச்சைவன் ஆனாலும் ஈழத்தமிழர் ஈழவரே; எங்கிருந்தாலும் நம்மவரே என முழக்கமிட்டு, பாட்டாளிவர்க்கத்தின் தலைமையிலான போராட்டத்துக்கு ஊடாக தமிழ்பேசும் மக்களுக்கு சமத்துவ சமதர்ம ஆட்சியை நிலைநாட்ட முடியும். மொழிவெறியாகவும் உயர் கல்வி பிரச்சினையாகவும் காட்டப்பட்ட தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை வர்க்க கண்ணோட்டத்திலும் மார்க்சிய அணுகு முறை ஊடாகவும் உடைமைப்பாட்டு பிரச்சினையாக வெளிப்படுத்தி, தமிழ்பேசும் மக்களின் அரசியல் களத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியவர் தோழர் இரட்னாவின் பெயரில் ஆரம்பிக்கப்படும் இந்தக் கற்கைகள் நிலையம் எதிர்காலத்தில் தூய்மையான அரசியல் செயற்பாட்டாளர்களை நாட்டுக்கும் தமிழ்பேசும் மக்களுக்கும் தருவிக்கும் பணியை சிறப்பாக செய்யும் என்றார்.

# வீடு உடைத்தவரை பிடித்து கட்டிவைத்து கொடுத்தனர்

■ பாலித ஆரியவங்ச



வீட்டை உடைத்து சொத்துகளைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ், பிரதான சந்தேகநபர் எனக்கூறப்படும் நபரை பிடித்து, கட்டிவைத்து, பொலிஸில் ஒப்படைத்த சம்பவம், வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர், பசறை பள்ளேகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு திங்கட்கிழமை (06) இரவு வந்து, கப்பம் கேட்டபோது, அவ்வீட்டில் இருந்தவர்கள் அவரை கையும் மெய்யுமாக பிடித்து, கட்டிவைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வெல்லவாய, மல்லன்தாவவ பிரதேசத்தில் பூட்டியிருந்த வீட்டை உடைத்துக்கொண்டு உள்நுழைந்து, ஆடை கழுவும் இயந்திரம், குளிரூட்டி இயந்திரம் உள்ளிட்டவற்றை கொள்ளையிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரமே பசறையைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# நீர்த் தேக்கங்களின் நீர் வெகுவாக குறைகிறது



■ செ.தி.பெருமாள்

கடந்த சில மாதங்களாக மத்திய மலைநாட்டில் கடுமையான வெப்பம் நிலவும் நிலையில், நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது.

இதனால், நீர் மின்நிலைய மின்சாரம் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர்த் தேக்கமான மவுஸ்சாகலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட சுமார் 52 அடி குறைந்த 86 அடி நீரையே கொண்டுள்ளது.

நீர் குறைந்து வருவதால் நீர்த் தேக்க பகுதிகளில் உள்ள 50 வருடங்கள் நீரில் மூழ்கிய ஆலயங்கள் தற்போது தென்படுகின்றன.

அதன்படி 1917ஆம் ஆண்டு கட்டப்பட்ட சண்முக நாதர் ஆலயம் மற்றும் சித்தி விநாயகர் ஆலயம், இஸ்லாமிய பள்ளியின் மசூதி, விஹாரையில் இருந்த புத்தபகவானின் சிலை ஆகியன தென்படுகின்றன.

பழைய மஸ்கெலியா நகரில் 1917ஆம் ஆண்டு கட்டப்பட்ட சண்முக நாதர் ஆலயம் 52 ஆண்டு காலமாக நீரில் மூழ்கிய நிலையில் இருந்தாலும் தற்போது மிகவும் கம்பீரமான தோற்றம் கொண்ட நிலையில் காட்சியளிக்கிறது.

அதனைக் பாதுகாக்க வேண்டிய கடமை இலங்கை மின்சார சபைக்கும் தொல்பொருள் ஆராய்ச்சி சபைக்கும் உள்ளது. ஆகவே, இந்த அரும் பெரும் கட்டடங்கள் மற்றும் பௌத்த சின்னம் ஆகியவற்றைக் காக்க வேண்டுமென இந்தப் பகுதியிலுள்ள அனைத்து மக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


# முட்டைகளை விற்ற மூவருக்கு சிக்கல்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரில் நிர்ணய விலைக்கு மேல், முட்டைகளை விற்றனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் வர்த்தகர்கள் மூவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திடீர் சுற்றிவளைப்பு தேடுதல்களை மேற்கொண்டபோதே, இந்த வர்த்தகர்கள் மூவரும் கூடுதலான விலைக்கு முட்டைகளை விற்றமை கண்டறியப்பட்டுள்ளது என நுவரெலியா மாவட்ட நுகர்வோர் சேவை அதிகார சபை காரியாலயத்தின் பொறுப்பதிகாரி அமில ரத்னாயக்க தெரிவித்தார்.

நுகர்வோரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, இந்தத் திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நேற்று (07) மேற்கொள்ளப்பட்டது.



வெள்ளை முட்டை ஒன்று 44 ரூபாய்க்கும், சிவப்பு நிற முட்டை ஒன்று 46 ரூபாய்க்கும் விற்பனை செய்வதற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனினும், மேற்படி மூன்று வர்த்தக நிலையங்களிலும் இவ்விரு வகையான முட்டைகளும் 52 ரூபாய் முதல் 56 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

அந்த மூவருக்கு எதிராகவும் இம்மாதம் 10ஆம் திகதி, ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# போயா தினத்தில் 33 பேர் கைது

மெதின் போயா தினமான திங்கட்கிழமை (06) பல்வேறு வகையான போதைப்பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்கு வருகைதந்த 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 4,5, 6ஆம் திகதிகளில் சிவனொளிபாதமலைக்கு வருகைதந்த வாகனங்களை சோதனைக்கு உட்படுத்திய போதே போதைப்பொருட்களுடன் பயணித்த 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட 33 பேரும் 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்று தெரிவித்த பொலிஸார், அவர்கள் அனைவரையும் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

# சந்தேகத்தை ஏற்படுத்திய ‘சிறந்ததொரு’ நாளும் அரசாங்கத்தின் காத்திருப்பும்

நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பயணத்தில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சியிடம் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதனை நிறைவேற்றிய பின்னர் ஜனாதிபதி தேர்தலா அல்லது பொதுத் தேர்தலா எது தேவை என்பதை தீர்மானிக்க முடியுமென தெரிவித்துள்ளார். அத்துடன், வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால் அதற்கெதிராக இந்த அரசாங்கம் கடுமையாகச் செயற்படுமென அச்சுறுத்தும் வகையில் கடுந்தொனியை பிரயோகித்துள்ளார்.

“தேர்தல் ஒத்திவைக்கப்படவில்லை, நடத்துவதற்கு தேர்தல் ஒன்று இல்லை” என இதே பாராளுமன்றத்தில் கருத்துரைத்ததன் ஊடாக, பெரும் சர்ச்சைக்குள் ஜனாதிபதி சிக்கியிருந்தார். அந்தக் கூற்றுக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் பொதுவெளியிலும், சமூக வலைத்தளங்களிலும் பரப்பப்பட்டன.

இதற்கிடையே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியொதுக்கீடு தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணைக்கு உட்படுத்திய உயர்நீதிமன்றம், ஒதுக்கப்பட்ட நிதியை தடுப்பதற்கான அதிகாரம் இல்லையென தீர்ப்பளித்திருந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை குறித்த திகதியில் நடத்துமாறு வலியுறுத்தி போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த போராட்டங்களை பொலிஸார், கண்ணீர்ப்புகை, நீர்த்தாரைப் பிரயோகங்களை செய்து கலைத்துவிடுகின்றனர்.

எனினும், “கருத்துகளை வெளியிடும் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதனை அமைதியாக செய்யுங்கள், கூட்டங்கள் நடத்துவதும், போராட்டம் நடத்துவதும் ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இந்தப் போராட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால், அதற்கு எதிராக இந்த அரசாங்கம் கடுமையாகச் செயற்படும்” என ஜனாதிபதி தனதுரையில் தெரிவித்திருந்தார்.

ஜனநாயக உரிமைக்காக குரல்கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். அதனை சீர்குலைக்க முடியாது. என்றாலும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தலைவணங்க வேண்டியது அனைத்து தரப்பினரின் கடப்பாடாகும்.

நமது நாட்டை பொறுத்தவரையில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனையே எதிர்பார்த்திருக்கின்றது. அக்கடனை, இந்த மாதத்தின் இறுதிக்குள் பெற்றுக்கொள்ளமுடியும் என ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார். அது மனதுக்கு இதமானதாக இருந்தாலும், அக்கடனை பெற்றுக்கொள்வதற்காக விதிக்கப்பட்ட நிபந்தனையை நிறைவேற்றுவதற்காக வரிகள் அதிகரிக்கப்பட்டமையால், சகல தரப்பினரும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கின்றன என்பதே உண்மையாகும்.

எனினும், கடனை பெற்றுக்கொண்டதன் பின்னரான நிபந்தனைகள் எவ்வாறு இருக்குமென்பது யாருக்கும் தெரியாது. இதற்கிடையே அறிக்கையொன்றை விடுத்துள்ள தேர்தல் ஆணைக்குழு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான மிகவும் பொருத்தமான நாள், ஏப்ரல் 25ஆகும் என குறிப்பிட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக அரசாங்கம் காத்திருக்கும் நிலையில், மிகவும் பொருத்தமான நாளொன்றை குறித்துள்ளதுதான் பெரும் குழப்பத்தையும் கடுமையான சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எல்லோரும் நீண்ட காலம் வாழவேண்டும் என விரும்புகின்றார்கள். ஆனால், வயது முதிர்ந்தவர்களாக இருக்க விரும்புவதில்லை. என்றும் இளமையுடன் இருக்க முடியுமா? வயது முதிர்ந்தவர்களில் பிரகாசமான தாத்தா, பாட்டிகளை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

என்றும் சந்தோசமாக இருந்தால், தேஜசுடன் இருக்க முடியும். இளமையும் முதுமையும் யதார்த்தமான மாற்றங்கள். இவற்றை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

மனிதர்களுக்கு பராயம் ஏறஏற அனுபவங்களும் வந்தபடியே இருக்கும். இதை விரும்பியோ விரும்பாமலோ இருந்தாலும் நல்ல அனுபவ அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். இவைகூட நல்ல சந்தர்ப்பம்தான்.

அறிவில் வல்லமை உடையது முதுமை. இளமையில் இருக்கும்போதே, உடல், பலம், மனோபலம் ஆகியவை இணைந்தால், முதுமையில் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும். இளமைக் காலத்தில் காலத்தை வீணடித்தால், பராயம் ஏறஏற சாதனைகளைச் செய்யும் சந்தர்ப்பங்களும் குறைவடையலாம்.

கல்வி, தொழில் அனுபவ ஞானங்கள் மூலமே சிறப்பான வாழ்க்கையை உருவாக்க முடியும். போட்டிபோட்டு முன்னேறும் காலம் இது. நீங்கள் தொடர்ந்து முயன்றால், எல்லாமே கைகூடி வரும். சந்தர்ப்பங்களை உருவாக்கி முன்னேறுவதே உங்கள் பணி!

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கிராமிய கைத்தொழில் பயிற்சி நிலையத்தை மீள ஆரம்பிக்கவும்

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் பாலமுனையில் இயங்கி வந்த இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கிராமிய கைத்தொழில் பயிற்சி நிலையத்தை, மீள ஆரம்பிக்குமாறு இளைஞர் -யுவதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாலமுனை, ஹுஸைனியா நகர் மீள்குடியேற்றத் திட்டத்தில் 16.05.1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிராமிய கைத்தொழில் பயிற்சி நிலையத்தில், ஆழ்கடல் மீன்பிடி வள்ளத்தின் வெளி இயந்திரம் திருத்துதல், தச்சுத் தொழில், உருக்கி காச்சி ஒட்டுதல், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் இடம்பெற்று வந்த நிலையில், தற்போது மூடப்பட்டுள்ளன.

இளைஞர் - யுவதிகள் தொழிற்பயிற்சி கற்கை நெறியைப் பயில்வதில் ஆர்வம்காட்டி வருகின்ற இக்காலகட்டத்தில், இப்பயிற்சி நிலையம் மூடப்பட்டு, கட்டடங்கள் பாழடைந்துள்ளதுடன் அங்கிருந்த உபகரணங்களும் அகற்றப்பட்டுள்ளன.

ஏனைய பிரதேச செயலக பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய கைத்தொழில் பயிற்சி நிலையங்கள் தொடர்ச்சியாக இயங்கி வருகின்ற நிலையில், இப்பயிற்சி நிலையம் மூடப்பட்டு, கவனிப்பாரற்று காணப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, அதே இடத்தில் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்குமாறும், அல்லது புதிதாக வேறு இடத்தில் ஆரம்பித்துத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

–எம்.எஸ்.எம் ஹனீபா

# பிடிக்க பிடிக்க தப்பி ஓடும் தேர்தல்



எம்.எஸ்.எம் ஐயூப்

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு, இதற்கு முன்னர் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு வழங்காத பெரும் முக்கியத்துவத்தை, அரசியல் கட்சிகளும் பொது மக்களும் வழங்கியுள்ளனர். எனவே, நாட்டில் பெரிதாக ஏதோ நடைபெறப் போவதாகவே பலரும் கருதுகின்றனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களோ மாகாண சபைத் தேர்தல்களோ நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வல்லவை அல்ல! எனவே இதற்கு முன்னர், அரசாங்கம் எந்தக் கட்சியிடம் இருக்கிறதோ அந்தக் கட்சிக்கே நாட்டில் தென்பகுதியில் பெரும்பான்மையான மக்கள் வாக்களித்து வந்தனர். எனவே, சாதாரண நிலைமைகளில் மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை அவ்வளவு பொருட்படுத்துவதில்லை. மிகக்குறைவாகவே இந்த விடயத்தில் விதிவிலக்குகளைக் காண முடியும்.

தேர்தல் நடைபெற்றால், தாம் படுதோல்வி அடைவோம் என்று பயப்படும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும், இந்தத் தேர்தலை பின்போடுவதற்காக, இந்தத் தேர்தலால் ஆட்சி மாற்றம் ஏற்படப்போவதில்லை என்ற வாதத்தை முன்வைக்கின்றன. உடனடியாக இத்தேர்தல் முடிவால் ஆட்சி மாற்றம் ஏற்படாவிட்டாலும், அது நிச்சயமாக ஆட்சி மாற்றத்துக்கு இட்டுச்செல்லும் என்பதில் சந்தேகம் இல்லை.

தற்போதைய அரசாங்கம் நீடித்தால், ராஜபக்‌ஷர்களின் கை மீண்டும் ஓங்கும்; அது அவர்களது ஆட்சி தொடர்வதற்கு உதவும்; அது, பொருளாதார ரீதியாக நாட்டைப் பாதிப்பது மட்டுமன்றி, சிறுபான்மை மக்களின் எதிர்காலத்தையும் வெகுவாகப் பாதிக்கலாம். அந்தவகையில், ஆட்சி மாற்றத்துக்கு இட்டுச் செல்லக்கூடிய இந்தத் தேர்தல் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இரட்டிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு, எதிர்க்கட்சிகளால் பொதுத் தேர்தல் போல் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக, கடந்த வருடம் கொதித்தெழுந்து, ஜனாதிபதியை நாட்டை விட்டே விரட்டியடித்த மக்களுக்கு, தமது உணர்வுகளை சட்டபூர்வமாக வெளிக்கொணரக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பமாகவே இத்தேர்தலைக் கருதமுடியும்.

அதேவேளை, கடந்த வருட மக்கள் எழுச்சியின் போது, பெரும்பாலான மக்கள் ஒருபோதும் இல்லாதவாறு வித்தியாசமாக சிந்திக்க முற்பட்டனர். எனவே, நாட்டில் வித்தியாசமான அரசியல் அலைகளையும் காணக்கூடியதாக இருக்கிறது. அதன் காரணமாகவும் எதிர்க்கட்சிகள் இடையேயும் பொதுமக்கள் இடையேயும் தேர்தலைப் பற்றிய உற்சாகம் மேலெழுந்துள்ளது.

இதுவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் தேர்தலை பின்போடுவதற்காக எடுத்த சகல முயற்சிகளும், வெள்ளிக்கிழமை (03) உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தீர்ப்பொன்றால் முறியடிக்கப்பட்டுவிட்டன.

கடந்த டிசெம்பர் மாதம், பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தால், தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை திறைசேரியின் செயலாளர் தடுத்து வைத்துக் கொண்டு இருக்க முடியாது என்று, அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. தேர்தல் சட்டபூர்வமாக அறிவிக்கப்படவில்லை; எனவே, அதற்காக நிதி வழங்க முடியாது என்ற ஜனாதிபதியின் வாதமும் அந்தத் தீர்ப்பால் முறியடிக்கப்பட்டுவிட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவால் தேர்தலுக்கு நிதி வழங்கப்பட வேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மனுவை விசாரித்தே, உயர்நீதிமன்றம் இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. இதற்கு முன்னர் மத்துமபண்டார, தேர்தலை நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவை பணிக்குமாறு கோரி மனுவொன்றை தாக்கல் செய்தார்.

அதை விசாரித்த போதும், உயர்நீதிமன்றம் தேர்தல் பணிகளை தொடருமாறு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்தது. அதன் மூலமும் தேர்தல் சட்டபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்ற ஜனாதிபதியின் வாதம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் கூறியதைப் போல் நகைப்புக்கு உரியதாகிவிட்டது.

ஆனால், தேர்தல் ஓரிரு வாரங்களில் நடைபெறுமா என்பது இன்னமும் உறுதியாகக் கூற முடியாது. தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பாக கலந்துரையாட, தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா நேற்று (07) கூட்டியிருந்த கூட்டத்தில், திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொலிஸ் மாஅதிபர் சந்தன விக்கிரமரத்ன ஆகியோரும் அழைக்கப்பட்டு இருந்தனர். அதில் எடுக்கப்பட்ட முடிவுகள், இந்தக் கட்டுரை எழுதப்படும் நேரத்தில் அறிவிக்கப்பட்டு இருக்கவில்லை.

இங்கு எழும் கேள்வி என்னவென்றால், உயர்நீதிமன்றம் என்ன தீர்ப்பை வழங்கினாலும் தேர்தலுக்காக வழங்குவதற்கு உண்மையிலேயே திறைசேரியில் போதுமான அளவு நிதி இல்லை என்று திறைசேரி செயலாளர் கூறினால் என்ன செய்வது என்பதாகும்.

ஏனெனில், வரவு - செலவு திட்டத்தால் பல்வேறு காரியங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்தாலும், வருட ஆரம்பத்தில் அவ்வனைத்துக்கும் திறைசேரி கையிருப்பில் பணத்தை வைத்திருப்பதில்லை. வரவு - செலவு திட்டத்தில் வரவு என்ற தலைப்பின் கீழ் வரும் வருமானங்கள், வருடம் முழுவதிலும் படிப்படியாக திறைசேரிக்கு வந்து சேர வேண்டியவையாகும்.

எனினும், திறைசேரி செயலாளரால் இந்தத் தேர்தல் தொடர்பில், அவ்வாறு கூற முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. சட்டப்படி இத்தேர்தல் மார்ச் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும். அது நிதி அமைச்சருக்கு வரவு- செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும் போதும் தெரியும். எனவே, அதற்கு அமையத்தான் அவர் ஒதுக்கீடுகளை செய்ய வேண்டும். பிரச்சினை என்னவென்றால், நாட்டில் பொருளாதார ரீதியில் ஓர் அசாதாரண நிலைமை உருவாகி உள்ளமையாகும். அதன்படி திறைசேரி செயலாளர், பணம் இல்லை என்றால் நிலைமை என்னவாகும்?

நேற்றைய கூட்டத்தில், நிதி வழங்க இணக்கம் தெரிவித்துவிட்டு, புதிய நிலைமைகளை உருவாக்கியும், அரசாங்கம் தேர்தலுக்கு நிதி வழங்காதிருக்க முயலலாம். ஏனெனில், அரசாங்கத்தின் அடிப்படை பிரச்சினை, தாம் தேர்தலில் படுதோல்வி அடையலாம் என்ற அச்சமாகும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால், அது நீதிமன்றத்தை அவமதித்ததாக வழக்கொன்றை தாக்கல் செய்ய எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பாகிவிடும்.

தேர்தலுக்கான நிதியைத் தடுத்து வைத்திருக்க முடியாது என்ற கடந்த வார உயர்நீதிமன்ற தீர்ப்பு, இரண்டு அதிகாரிகளுக்கு எதிராகவே வழங்கப்பட்டுள்ளது. திறைசேரி செயலாளர், சட்ட மாஅதிபர் ஆகியோரே அந்த இருவராவர்.

வழமையாக அரச அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் போது, சட்ட மாஅதிபரையும் ஒரு பிரதிவாதியாக குறிப்பிடுவது வழமையாகும். ஆனால், இந்த வழக்கில் சட்ட மாஅதிபர் அந்த அடிப்படையில் அல்லாது, ஜனாதிபதிக்குப் பதிலாகவே பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏனெனில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் கீழ், ஜனாதிபதி செய்த அல்லது செய்யாதிருந்த எந்தவோர் உத்தியோகபூர்வ அல்லது தனிப்பட்ட நடவடிக்கைக்காகவும் அவருக்கு எதிராக அவர் பதவியில் இருக்கும் காலத்தில், வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. இந்தநிலையில், அவ்வாறானதொரு நிலையில், ஜனாதிபதிக்கு பதிலாக சட்ட மாஅதிபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்று அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் சட்டப் பிரமாணங்கள் கொண்டு வரப்பட்டன. அந்த அடிப்படையிலேயே, இந்த வழக்கில் சட்ட மாஅதிபர் சேர்க்கப்பட்டுள்ளார். அதாவது, இந்தத் தீர்ப்பு ஜனாதிபதியையும் கட்டுப்படுத்துகிறது.

அவ்வாறு இருந்தாலும், ஜனாதிபதியே நிதிஅமைச்சர் என்ற முறையில், அந்த உத்தரவை மீறினால் என்ன செய்வது? கடந்த காலங்களில் ஜனாதிபதிகள், உயர்நீதிமன்ற தீர்ப்புகளை மீறியிருக்கிறார்கள். 2008ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் எண்ணெய் விலையை குறைக்குமாறு உயர்நீதிமன்றம், தீர்ப்பொன்றை வழங்கியது. ஆனால், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ அதைப் புறக்கணித்தார்.

இவ்வாறு சட்டத்தை மீறாமல், நீதிமன்ற உத்தரவை மீறாமல் அரசாங்கம், தேர்தலை பிற்போடும் அபாயம் இன்னமும் இருக்கிறது. நேற்றைய கூட்டத்தின் போது, திறைசேரி செயலாளர் நிதி வழங்க இணக்கம் தெரிவித்தாலும் ஒத்திவைக்கப்பட்ட தபால் மூல வாக்கெடுப்பை நடத்திவிட்டே தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்த வேண்டும். தபால் மூல வாக்கெடுப்புக்காக வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி நேற்று வரை இடைநிறுத்தப்பட்டு இருந்தால், அப்பணி முடியும் வரை அவ்வாக்கெடுப்பை நடத்த முடியாது.

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் அம்மன்றங்களின் தேர்தல் தொகுதிகளை புதிதாக நிர்ணயம் செய்வதற்காக கடந்த நவம்பர் மாதம் பிரதமர் தினேஷ் குணவர்தன ஒரு குழுவை நியமித்தார். அதன் அறிக்கையை இம்மாதம் முடிவடைவதற்குள் சமர்ப்பிக்க முடியும் என்று அக்குழுவின் தவிசாளரும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அது பாராளுமன்றத்தால் அங்கிகரிக்கப்பட்டு, அத்தோடு அந்த அறிக்கையின் படியே தேர்தல் நடைபெற வேண்டும் என்று அரசாங்கம் தமது பெரும்பான்மை பலத்தை பாவித்து, பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை நிறைவேற்றினால், ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டு இருக்கும் வேட்பு மனுக்கள் செல்லுபடியற்றதாகிவிடும். அப்போது புதிதாக வேட்புமனு கோரப்பட்டுத்தான் தேர்தலை நடத்த வேண்டியிருக்கும்.

ஒரு சில வாரங்களில் சர்வதேச நாணய நிதியத்திடம் எதிர்பார்க்கப்படும் கடன் கிடைக்கும் என்றும் அதன் மூலம் உடனடியாக மக்களுக்கு சில சலுகைகளை வழங்கி, அவர்களைத் தம் பக்கம் வென்றெடுக்கலாம் என்றும் அரசாங்கம் கருதுவதாக இருந்தால் அவ்வாறும் நடக்கலாம். எனவே, தேர்தல் உடனடியாக நடைபெறும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

# ரூபாயின் மதிப்பு உயர்ந்துள்ளதா?



ச.சேகர்




அண்மைய சில நாள்களில் இலங்கை ரூபாயின் மதிப்பு உயர்வடைந்த வண்ணமுள்ளது என்பது பலர் மத்தியில் பரவலாக பேசப்படும் விடயமாக அமைந்திருப்பதுடன், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அரசாங்கத்தின் நிதி அமைச்சைச் சேர்ந்தவர்கள், இதற்கு அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்கள் காரணமாக அமைந்திருப்பதாக தெரிவித்திருந்தனர்.

பொருளியலைப் பொறுத்தமட்டில், ஏதேனும் ஒரு பண்டத்தின் அல்லது சேவையின் விலை அல்லது பெறுமதி உயர்வடைகின்றதாயின், அதற்கு காணப்படும் கேள்வி அதிகரித்திருக்க வேண்டும்; அல்லது, அதன் விநியோகம் குறைவடைய வேண்டும். இது சாதாரணமாக பாடசாலைக் கல்வியில் பொருளியல் பாடத்தில் கற்றுக் கொண்ட அடிப்படை விடயமாகும்.

> **தற்போது காணப்படும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, மீண்டும் 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் நிலவியதைப் போல நாடு இயங்க ஆரம்பிக்குமாயின், அமெரிக்க டொலருக்கான கேள்வி அதிகரிக்கும். அச்சந்தர்ப்பத்தில் இலங்கை ரூபாயின் மதிப்பு மீண்டும் வீழ்ச்சியடையும்**

இலங்கை சந்தையில் அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைவது என்பதில், எம் நாட்டில் காணப்படும் அமெரிக்க டொலரின் எண்ணிக்கை அதிகரித்திருக்க வேண்டும் அல்லது அமெரிக்க டொலருக்கு காணப்படும் கேள்வி குறைவடைந்திருக்க வேண்டும்.

2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், நாட்டில் பல்வேறு விதமான இறக்குமதி கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் தவிர்ந்த, ஏனைய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தொடர்ச்சியாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நாட்டில் காணப்படும் வியாபாரங்களில் சுமார் 55 சதவீதமானவை சிறிய, நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்களாக காணப்படுவதுடன், அவற்றில் சுமார் 90 சதவீதமான வியாபாரங்களுக்கு தமது வியாபார செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான மூலப் பொருட்களை இறக்குமதி செய்து பெற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை நிலவுகின்றது.

இறக்குமதி கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள சூழலில், குறித்த வியாபாரங்களிடம் அந்நியச் செலாவணி (டொலர்) காணப்பட்ட போதிலும், அவற்றை இறக்குமதி செய்து கொள்ள முடியாததன் காரணமாக, கேள்வி குறைவடைந்துள்ளது.

உண்மையில் இந்த அமெரிக்க டொலர் மதிப்பிறக்கத்துக்கு பிரதான காரணமாக, உலக வங்கியின் துணை நிறுவனமான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC), இலங்கையின் மூன்று தனியார் வங்கிகளுக்கு மூன்று மாத காலப்பகுதிக்கு நாணய இடைமாற்றத்தை (Currency Swap) மேற்கொள்வதற்கு முன்வந்திருந்தமை அமைந்திருந்தது. நாட்டுக்கு அவசியமான மருந்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கு வசதியளிக்கும் வகையில் 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய இடமாற்றத்தை மேற்கொள்ள முன்வந்திருந்தது. இதனூடாக, சந்தையில் அமெரிக்க டொலர் வரத்து அதிகரித்துக் காணப்படும் எனும் ஒரு வித எதிர்பார்ப்பு எழுந்துள்ளதுடன், ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்கும் அமெரிக்க டொலரில் 25 சதவீதத்தை மத்திய வங்கியில் பேண வேண்டும் எனும் தீர்மானத்திலும் கடந்த வாரம் தளர்வு ஏற்படுத்தப்பட்டு 15 சதவீதமாக குறைக்கப்பட்டிருந்தது. இதனால் வங்கிகளுக்கும் தம்வசம் காணப்படும் அந்நியச் செலாவணியை சந்தையில் வெளியிடுவதற்கான வாய்ப்புக் கிடைத்திருந்தது. இவை அனைத்துக்கும் குறுக்கால அடிப்படையில் நிகழும் சம்பவங்களாக அமைந்துள்ளன.

அத்துடன், இவ்வாறு அமெரிக்க டொலரின் மதிப்பு உள்நாட்டு சந்தையில் வீழ்ச்சியடைந்து வருவதை அவதானித்து, அவற்றை தம்வசம் அதிகளவில் கொண்டிருக்கும் பெரும் வர்த்தகர்கள் மற்றும் உண்டியல் போன்ற கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோர், அவற்றை மாற்றும் நடவடிக்கைகளிலும் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். இதனாலும் அமெரிக்க டொலர் உள்நாட்டு சந்தையில் அதிகளவு கிடைக்கும் நிலை எழுந்துள்ளது. இவ்வாறு அமெரிக்க டொலரின் மதிப்பு உள்நாட்டு சந்தையில் வீழ்ச்சியடைவதை கட்டுப்படுத்தும் வகையில், தாம் அவற்றை கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் பேணப்பட்டு வரும் நிலையில், இலங்கைக்கு பல்வேறு வழிகளில் கிடைக்கும் அந்நியச் செலாவணியை தொடர்ந்தும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால், சந்தையில் இந்த மிகை டொலர் மிதப்பு தொடர்ந்தும் சில காலப்பகுதிக்கு நிலவும் என்பதுடன், இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடுகளில் தற்போது காணப்படும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, மீண்டும் 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் நிலவியதைப் போல நாடு இயங்க ஆரம்பிக்குமாயின், அல்லது தற்போது காணப்படும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டால், அமெரிக்க டொலருக்கான கேள்வி அதிகரிக்கும். அச்சந்தர்ப்பத்தில் இலங்கை ரூபாயின் மதிப்பு மீண்டும் வீழ்ச்சியடையும்.

> **இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் பேணப்பட்டு வரும் நிலையில், இலங்கைக்கு பல்வேறு வழிகளில் கிடைக்கும் அந்நியச் செலாவணியை தொடர்ந்தும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால், சந்தையில் இந்த மிகை டொலர் மிதப்பு தொடர்ந்தும் சில காலப்பகுதிக்கு நிலவும்**

இந்தச் சூழ்நிலையை பயன்படுத்தி, அமெரிக்க டொலரின் பெறுமதிக்கு நிகராக இலங்கை ரூபாயின் மதிப்பு தற்போது அதிகரித்து வருவதால், நாட்டின் பொருளாதாரம் வலிமையடைந்து வருவதாக சில அரசியல் தரப்பினர் பிரசாரம் செய்வதையும், ஊடகங்கள் சில அறிக்கைகளை இடுவதையும் அவதானிக்க முடிகின்றது. இவை உண்மையில் மக்களை தவறாக வழிநடத்தும் கருத்துகளாக அமைந்துள்ளன.

> **இலங்கை ரூபாயின் மதிப்பு உண்மையில் அதிகரிக்கவில்லை. சந்தையில் டொலர் புழக்கம் அதிகரித்துள்ளதுடன், இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக, அதற்கான கேள்வி குறைந்துள்ளதால் இந்த நிலை எழுந்துள்ளது**

தேர்தல் முன்னெடுப்பது தொடர்பில் பல தரப்புகளிடமிருந்தும் அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என அண்மையில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதியும், நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். இந்நிலையில், மக்கள் மத்தியில் தாம் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் வகையில் மேற்கொண்ட செயற்பாடுகளினூடாக இவ்வாறு ரூபாய் மதிப்பு அதிகரித்துள்ளது. இந்நிலை தொடர்வதற்கு தற்போது தேர்தல் செலவு அவசியமற்றது போன்றவாறான ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தவும் முனைவதைப் போல தோன்றுகின்றது.

எவ்வாறாயினும், அரசாங்கத்தால் குறிப்பிடுவதைப் போல, இம் மாதத்தினுள் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி கிடைக்கும்பட்சத்தில், இலங்கைக்கு தொடர்ந்தும் வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதற்கு தயார்நிலையில் இருப்பதாக அறிய முடிகின்றது. குறிப்பாக, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் போன்றவற்றிடமிருந்து இலங்கைக்கு உதவிகள் கிடைக்க தயாராகவுள்ளன.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி கிடைக்கும்பட்சத்தில், தற்போது காணப்படும் இந்த ரூபாய் மதிப்பு உயர்வு தொடர்ந்தும் ஒரு மூன்று மாதங்கள் வரை தொடரக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. அதில், அரசாங்கத்தால் தொடர்ந்தும் இறக்குமதி கட்டுப்பாடுகள் தற்போது நிலவுவதைப் போலவே பேணப்படுமா என்பது தாக்கம் செலுத்தும். உதாரணமாக, தற்போது எரிபொருள் QR குறியீடு அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றது. இதில் வாராந்தம் வழங்கப்படும் அளவில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டால், இறக்குமதி செய்யப்படும் எரிபொருளின் அளவிலும் அதிகரிப்பு மேற்கொள்ள நேரிடும். இதனால் அதற்குத் தேவையான அமெரிக்க டொலருக்கான கேள்வி சந்தையில் அதிகரிக்கும். இவ்வாறான காரணிகள், மீண்டும் அமெரிக்க டொலர் பெறுமதி உள்நாட்டு சந்தையில் உயர்வடைய காரணமாக அமையும்.

ஆக, இலங்கை ரூபாயின் மதிப்பு உண்மையில் அதிகரிக்கவில்லை. சந்தையில் டொலர் புழக்கம் அதிகரித்துள்ளதுடன், இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக, அதற்கான கேள்வி குறைந்துள்ளதால் இந்த நிலை எழுந்துள்ளது.

# நீ முதல் ஆளாக இரு; கடைசி ஆள் அல்ல!

## இன்று சர்வதேச மகளிர் தினம்



உமாகாந்தன் கஜேந்தினி
( நான்காம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

பெண்கள் இல்லாத துறைகளே இல்லை என்று கூறுமளவுக்கு பெண்கள் கல்வியில் சாதித்து தமக்கு பிடித்த துறைகளில் முன்னேறி வருகின்றனர். பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்வியற்கல்லூரிகள், மருத்துவத்துறை, தாதியர்கள், பொறியியல்துறை, சட்டத்துறை, நிர்வாகத்துறை, அரசியல் துறை, பொருளியல் துறை, விஞ்ஞான துறை, விண்வெளி மற்றும் ஆசிரியத்துறை என அனைத்து துறைகளிலும் பெண்கள் இன்றைக்கு கம்பீரமாக நடைபோடுகிறார்கள். இன்றைக்கு உலக தலைவர்கள் வரிசையில் கூட பெண்கள் அதிகமாக உள்ளனர். இன்றைய சமுதாயத்தில் பெண்களின் வளர்ச்சியும் பங்களிப்பும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் வளர்ச்சியாக பார்க்கப்படுகிறது.

> **இந்த உலகத்தின் உயிர்களை சிருஸ்டிக்கும் பெண் எமது சமூகத்தில் போற்றப்பட வேண்டியவர்கள். இயல்பாகவே அறிவும் மனவலிமையும் மிக்க பெண்கள் சில மூடநம்பிக்கை மிக்கவர்களால் அடக்கப்படுகிறார்கள்**

நமது சமுதாயத்தில் பெண்கள் கல்வி கற்கத் தொடங்கியதன் பின்னரே நமது சமூகத்தில் சமத்துவம் வளர ஆரம்பித்தது. இது இல்லாதவிடத்து பெண்கள் வீட்டுக்குள்ளே இருக்க வேண்டியிருந்தமையால் பெண்களுக்கான கல்வியோ சமூக அங்கிகாரமோ கிடைக்கவில்லை. பொதுவாக பெண்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் ஆணாதிக்கம்.

இது குறிப்பாக அரசியல் துறையில் தெளிவாகத் தெரிகிறது. ஒரு பெண்ணின் அனுபவம், கல்வி அல்லது திறன்களைப் பொருட்படுத்தாமல், சமூகத்தின் ஆணாதிக்க இயல்பு, ஆண்களை விட பெண்கள் குறைந்த தகுதி மற்றும் திறமை குறைந்தவர்கள் என்ற கருத்தை வளர்க்கிறது. ஆணாதிக்கம் என்பது என்னவென்றால், வலிமையான மற்றும் புத்திசாலியான பெண் ஒரு பிரச்சினையை பிரதிநிதித்துவப்படுத்துகிறாள் என்று மக்களை நம்ப வைத்து தாம் நல்லவர்களாக வலம் வருவதாகும். சமூக ஒழுங்கின் ஒருங்கிணைந்த பகுதியாக இல்லாமல் ஒரு சீர்குலைவை ஏற்படுத்தி வருகிறது. பெண் அரசியல்வாதிகளைப் பற்றிய பக்கச்சார்பான பல செய்திகள் பரப்பப்படுகின்றன.

> **நமது சமுதாயத்தில் பெண்கள் கல்வி கற்கத் தொடங்கியதன் பின்னரே நமது சமூகத்தில் சமத்துவம் வளர ஆரம்பித்தது. பெண்கள் வீட்டுக்குள்ளே இருக்க வேண்டியிருந்தமையால் பெண்களுக்கான கல்வியோ சமூக அங்கிகாரமோ கிடைக்கவில்லை. பொதுவாக பெண்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் ஆணாதிக்கம்**

உலகளாவிய கண்ணோட்டத்தில், பெண்கள் எதிர்கொள்ளும் மற்றுமொரு மிகப்பெரிய சவால்களில் ஒன்று கல்வி சமத்துவமின்மை. அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா மற்றும் அதற்கு அப்பால் உள்ள நவீன பெண்ணிய இயக்கங்களின் பல ஆதாயங்கள் இருந்தபோதிலும், ஆண்களுக்கு வழங்கப்படும் அதே கல்வி வாய்ப்புகளுக்கு பெண்கள் குறைவாகவே தகுதியானவர்கள் என்று பலர் இன்னும் நம்புகிறார்கள். வறுமை, புவியியல் மற்றும் பிற காரணிகள் கல்வியில் பெரும் ஏற்றத்தாழ்வுகளுக்கு பங்களிக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை என்றாலும், ஆணாதிக்கம் இந்த வாய்ப்பு மறுப்பை நியாயப்படுத்துகிறது.

ஆண்களே அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும், பெண்கள் சமூகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கீழ்நிலைப் பதவியை வகிக்க வேண்டும் என்ற செய்தியை இது ஊட்டுகிறது. இவை பாலினத்தின் அடிப்படையில் வேறு பல ஏற்றத்தாழ்வுகளை தூண்டுகிறது. பெண்கள் இயல்பிலேயே சிறப்புடையவர்கள். இந்த உலகத்தின் உயிர்களை சிருஸ்டிக்கும் பெண் எமது சமூகத்தில் போற்றப்பட வேண்டியவர்கள். இயல்பாகவே அறிவும் மனவலிமையும் மிக்க பெண்கள் சில மூடநம்பிக்கை மிக்கவர்களால் அடக்கப்படுகிறார்கள்.

பெண்கள் கல்வி கற்க கூடாதென கூறி அவர்களை சிறுவயதில் திருமணம் செய்து வைத்தல், கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏற செய்தல், பெண்கள் வீட்டை தாண்டி வெளியில் செல்லவே முடியாத அளவுக்கு அடக்குமுறைகள் காணப்பட்டன. இதனை மீறும் பெண்களை சமூகத்தில் தவறானவர்களாக காட்டி தண்டிக்கும் வழக்கம் அக்கால சமூகத்திற்கு இருந்தது. இதனால் பெண்கள் தமது கனவுகளை தொலைத்து தமது ஆசைகளை மறந்து காலமுள்ளவரை கண்ணீரில் உழன்றனர். இது காலப்போக்கில் மாறியது. ஆனாலும் இன்றைக்கு பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கெல்லாம் அடக்குமுறை மிக்க சமூகமும் கல்வியறிவு குறைவான தன்மையுமே காரணமாகும். வறுமையினை காரணம் காட்டி பெண் பிள்ளைகளை கல்வி கற்க பெற்றோர் அனுப்புவதில்லை. பெண்பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தவுடன் அவர்கள் கடமை முடிந்ததாக கருதுகின்றனர். வெளிநாட்டு மோகத்தில் வயது வித்தியாசம் மறந்து பெண் பிள்ளைகள் தொலைக்கப்படுகின்றார்கள்.

இதனால் பெண்களின் கனவுகள் சிதைந்து போகின்றன. திறமையும் அறிவும் இருந்தாலும் கூட பெண்களை விரும்பிய துறையில் செல்ல குடும்பங்கள் அனுமதிப்பதில்லை. வீடுகளில் இருக்கும் பெண்கள் அதிகம் வன்முறைகளால் பாதிக்கப்படுகின்றனர். பிரச்சனைகளுக்கு நியாயம் கேட்குமளவுக்கு தைரியமும் அறிவும் இல்லாமையினாலேயே பெண்கள் அடக்கப்படுகின்றனர். இந்நிலைமை இன்று கணிசமாக மாறியுள்ளது. பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். இந்தியாவில் அதிகம் இது நடைபெறுகிறது. எனவே அதைத் தடுக்க 1929ஆம் ஆண்டு சாரதா சட்டம் போடப்பட்டது. 1961ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்புச் சட்டமும் 1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டமானது பெற்றோர்களின் சொத்துகளையுடைய பெண்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. 1956 ஆம் அண்டு இந்து விதவைகள் மறுமணச் சட்டமானது இந்து விதவைகள் (கைம்பெண்கள்) மறுமணத்தை அங்கீகரிக்கின்றது.

பெண் தொழிலாளர்களின் உரிமைகள் பூரணமாக கிடைக்கப்பெறுகின்றதா என்பது தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. புள்ளிவிபரங்களை நோக்குமிடத்து அரச துறையை விடவும் தனியார் துறையில் பெண்களுக்கான தொழில் செய்யும் சூழ்நிலையானது மிகவும் கடிமானதாக இருந்தாலும் அதிகமாக பெண்களின் பங்கேற்பை காணலாம். பெண்கள் வலுப்பெறுவது என்பது ஒட்டுமொத்த மனித சமுதாயம் வலுப்பெறுவதற்கு ஒப்பானதாகும் என்பதை சிந்தனையில் செலுத்தி பெண்கள் கடைசி நிலையில் நில்லாது முதல் நிலையில் இருக்க பெண்களுக்கான சிறப்பு தினத்தில் நானும் பெண் என்ற பெருமையுடன் வாழ்த்தி மகிழ்கிறேன்.



சீனா

# பெண்களின் உள்ளாடை விளம்பரங்களில் ஆண்கள்

சீனாவில், ஆபாசமான விடயங்களை ஒன்லைனில் பரப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அண்மையில் பெண்களின் உள்ளாடை விளம்பரங்களில் நடிக்க, சீனபெண்களுக்கு அந்நாட்டு அரசு தடைவிதித்திருந்தது.

இந்நிலையில், பெண்களின் உள்ளாடைகளை சந்தைப்படுத்த சீனாவைச் சேர்ந்த லைவ்ஸ்ட்ரீம் ஃபேஷன் நிறுவனங்கள் புதிதாக ஆண் மொடல்களை களமிறக்கியுள்ளன.

அந்தவகையில் பெண்களின் உள்ளாடைகளை அணிந்து குறித்த ஆண் மொடல்கள் தோன்றும்



வீடியோக்கள் 'The light and luxurious boudoir of the wife and adults' என்ற தலைப்பின் கீழ் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

அதே சமயம் இந்த விளம்பரங்களின் இயக்குநர்கள் பெரும்பாலும் பெண்களாகவே இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



புர்கினோ பாஸோ


## புர்கினோ பாஸோவில் பயங்கரம்
### 12 பேர் உயிரிழப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவில் 2013ஆம் ஆண்டு முதல் அல்-கொய்தா மற்றும் ஐஎஸ் ஆதரவு பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் உவாகிகவ்யாவிற்கு வடக்குப் பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் அண்மையில் பயங்கரவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 7 சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா

## நவீன குகை மனிதன்
### 16 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிச்சத்திற்கு வந்த உண்மை



வாடகை கொடுப்பதில் சலிப்படைந்த நபர் ஒருவர் கடந்த 16 ஆண்டுகளாக குகையில் வசித்து வந்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த டானியல் ஷெல்லா பார்ஜர் என்ற நபரே இவ்வாறு வீட்டை விட்டு வெளியேறி குகையொன்றில் வாழ்ந்து வந்துள்ளார்.

'மொடர்ன் கேவ் மேன்' (நவீன குகை மனிதன்) என்றழைக்கப்படும் இவர் வீட்டு வாடகை செலுத்துவதில் நெருக்கடியைச் சந்தித்ததாலும், பணியிடத்தில் ஏற்பட்ட அதிகப்படியான மனவுளைச்சலாலும் கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்னர் தனது உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்துள்ளார்.

எனினும் பின்னர் அம்முடிவை மாற்றிக் கொண்டு நாடோடியாக வாழத் தொடங்கினார். அந்தவகையில் 2009 ஆம் ஆண்டு வீட்டை வீட்டு வெளியேறிய அவர் 'உடா' என்ற பகுதியில் உள்ள குகையொன்றில் வசிக்கத்தொடங்கியுள்ளார்.

மத்தியப் பிரதேசம்

## அனுமான் அருகே பிகினி

மத்திய பிரதேசத்தில் பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் அங்குள்ள ரத்லமில் பகுதியில் அண்மையில் 13 ஆவது ஜூனியர் பொடி பில்டிங் சம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றுள்ளது.

இந்திய பொடிபில்டிங் சம்மேளனத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப் போட்டி நிகழ்ச்சியில், இந்தியா முழுவதிலும் இருந்து சுமார் 400க்கும் மேற்பட்ட பொடி பில்டர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த போட்டியின்போது மேடையில் அனுமான் சிலை வைக்கப்பட்டிருந்த நிலையில் அதன் அருகே பிகினி உடை



அணிந்த இளம் பெண் பொடி பில்டர்கள் தங்கள் தடகள உடலை முறுக்கி காட்டும் வீடியோவானது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகின்றது.

இதனையடுத்து பொடி பில்டிங் போட்டியில், மேடையில் ஹனுமான் சிலை வைக்கப்பட்டமைக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

சீனா

## சீன அலைபேசிகளை பயன்படுத்த வேண்டாம் – உளவுத்துறை எச்சரிக்கை



இந்தியாவில் தற்போது 'விவோ, ஒப்போ, ஸையோமி, ஒன்ப்ளஸ், ஹானர், ரியல் மீ, ஜியோனி உள்ளிட்ட சீன தயாரிப்புத் அலைபேசிகள் பயன்பாட்டில் உள்ளன.

இந்நிலையில், "சீன எல்லைக்கு அருகில் பாதுகாப்புப் பணியில் இருக்கும் இந்திய வீரர்கள், சீனாவால் தயாரிக்கப்பட்ட அலைபேசிகளைப் பயன்படுத்த வேண்டாம்" என இந்திய பாதுகாப்புத் துறை எச்சரித்துள்ளது.

இது குறித்து இந்திய பாதுகாப்புத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் 'சீனாவில் தயாரிக்கப்படும் அலைபேசிகளைப் பயன்படுத்துபவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இத்தகைய அலைபேசிகளில் ஸ்பைவேர் மற்றும் மால்வேர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இராணுவ உயர் அதிகாரிகள் சீன தயாரிப்புத் அலைபேசிகளைப் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது இராணுவ வீரர்களுக்கும் குறித்த அலைபேசிகளைப் பயன்படுத்த வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இமாச்சல பிரதேசம்

## 5 நாள்களுக்கு நிர்வாணமாக வாழும் பெண்கள்

இமாச்சல பிரதேசம், குலு மாவட்டத்தில் உள்ள பினி என்கிற கிராமத்தில் பெண்கள் ஆடை அணியாமல் 5 நாள்கள் நிர்வாணமாக இருக்கும் விநோத பழக்கமொன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இக்கிராம மக்கள் லாஹு கோண்ட் என்ற தெய்வத்தை வழிபாடு செய்து வருகின்றனர். லாஹு கோண்ட் என்ற கடவுள், பெண்களின் ஆடைகளைக் கிழித்து, அவர்களின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவித்த அரக்கனை கொன்ற நாளைக் கொண்டாடும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஐந்து நாள்கள் இத் திருவிழாவானது கொண்டாடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த ஐந்து நாள்களும், சிறுமியர் தொடங்கி பெரியவர் வரை அனைத்து பெண்களும் நிர்வாணமாக தான் இருக்கவேண்டும் எனவும், இந்நாள்களில் பெண்கள் யாரும் சிரிக்கக்கூடாது எனவும், ஆண்கள் கண்களில் படக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இலங்கை எதிர் நியூசிலாந்து

## நாளை ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, கிறைஸ்ட்சேர்ச்சில் நாளை அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பமாகவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான போட்டியில் இலங்கை இன்னும் காணப்படுகையில் நியூசிலாந்துக்கு போராட்டத்தை இலங்கை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் அணித்தலைவர் திமுத் கருணாரத்ன, தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோரின் பங்களிப்பு அவசியமாவதுடன், விஷ்வ பெர்ணாண்டோ, அசித பெர்ணாண்டோ, கசின் ராஜித உள்ளிட்டோர் நியூசிலாந்தின் 20 விக்கெட்டுகளையும் கைப்பற்றுவது அவசியமாகிறது.

மறுபக்கமாக நியூசிலாந்தானது இங்கிலாந்தை வீழ்த்தி நம்பிக்கையுடன் இருந்தாலும் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

## இங்கிலாந்தை வென்ற பங்களாதேஷ்



இங்கிலாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியில் பங்களாதேஷ் ஆறுதல் வெற்றி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 246/10 (48.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷகிப் அல் ஹஸன் 75 (71), முஷ்பிக்கூர் ரஹீம் 70 (93), நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 53 (71) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஃப்ரா ஆர்ச்சர் 3/35, அடில் ரஷீட் 2/21, சாம் கர்ரன் 2/51, கிறிஸ் வோக்ஸ் 1/27, றெஹான் அஹ்மட் 1/62)

இங்கிலாந்து: 196/10 (43.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேம்ஸ் வின்ஸ் 38 (44), பில் ஸோல்ட் 35 (25), கிறிஸ் வோக்ஸ் 34 (46), ஜொஸ் பட்லர் 26 (24), சாம் கர்ரன் 23 (49) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 4/35, எபொடொட் ஹொஸைன் 1/38, தஜியுல் இஸ்லாம் 2/52, முஸ்தபிசூர் ரஹ்மான் 1/25, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/46)

போட்டியின் நாயகன்: ஷகிப் அல் ஹஸன்

தொடரின் நாயகன்: அடில் ரஷீட்



அமரர் பியூஸ்லஸ் வெற்றிக் கிண்ணத் தொடர்

## சம்பியனான ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சாதனை நாயகன் அமரர் பியூஸ்லஸ்ஸின் முதலாமாண்டு ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரனையுடன் மாந்தை பிரதேச விளையாட்டு மைதானத்தில் தொடர்ச்சியாக நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியானது நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் அணியை வென்றே ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலய வீதியோட்டப் போட்டி

## முதலிடம் பெற்ற றபாஸ்

■ ஒலுமுதீன் கியாஸ்

கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் விழாவின் வீதியோட்டப் போட்டி அண்மையில் நடைபெற்ற நிலையில், முதலாமிடத்தை மினா இல்லத்தைச் சேர்ந்த ஆர்.எம். றபாஸ் பெற்றார்.

அரபா இல்லத்தைச் சேர்ந்த ஓட்ட வீரர்களான எம்.ஏ.எம். ரஷ்மி, எஸ்.எம். சப்ரி, ஆகியோர் முறையே இரண்டு, மூன்றாமிடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

10 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இப்போட்டியில் அரபா, சபா, மீனா இல்லங்களைச் சேர்ந்த 37 மாணவர் கலந்து கொண்டனர். இதில் 33 மாணவர் இத் தூரத்தை ஓடி முடித்தமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 08 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.